சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – “சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடியில் சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்” அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.85 நாள். 08.05.2018

திருவள்ளுவராண்டு, 2049

விளம்பி வருடம், சித்திரை–25

படிக்கப்பட்டது:–

பொது நூலக இயக்குநரின் கடிதம். ந.க.எண். 5894/உ1/2017, நாள் 05.02.2018.

~*~~*~

ஆணை:–

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> “தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த, பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்”.

2. மேலே படிக்கப்பட்ட பொது நூலக இயக்குநரின் கடிதத்தில், தமிழகத்தில் பண்டைய அரசியல், சமுதாய மற்றும் பொருளாதார பயன்பாட்டினை முழுமையாக வெளிப்படுத்த இது சார்ந்த சிறப்பு நூலகத்தினை சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடியில் சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் அமைக்கவும், அதற்கு தேவையான உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர செலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.1.00 கோடியை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

(த.பி.பா)

| வ. எண். | பணி விவரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அகழ்வைப்பகக் கட்டடம் கட்டுதல் 60x40 அடி (2400 சதுர அடி) 2400 X ரூ.2000/– ஒரு சதுர அடிக்கு | 48.00 |
| 2. | கட்டடத்தில் மின்வசதி செய்வதற்கு | 8.00 |
| 3. | நவீன காட்சிப்பெட்டிகள் அமைத்தல் | 28.00 |
| 4. | தொல்பொருட்களை உரிய பாதுகாப்புடன் வெவ்வேறு இடத்திலிருந்து வாகனம் மூலம் கொண்டு வருதல். | 3.00 |
| 5. | காட்சிப்பெட்டிகளுக்கு தேவையான உரிய மின்விளக்குகள் மற்றும் வெளிப்புறத்தில் மின் விளக்குகள் அமைத்தல். | 8.00 |
| 6. | தொல்பொருட்களுக்கு விளக்கக் குறிப்பு மற்றும் விளக்க அட்டைகள் செய்தல். | 1.00 |
| 7. | கண்காணிப்பு கேமரா, கணினி மற்றும் உபகரணங்கள் | 2.00 |
| 8. | எதிர்பாராத செலவினங்கள் | 2.00 |
| | மொத்தம் | 100.00 |

3. பொது நூலக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று, சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடியில் சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்” அமைப்பதற்கும், அதற்கான செலவினத் தொகையான ரூ.1.00 கோடியை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று தொல்லியல் துறையின் மூலம் மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.16280/நிதி(கல்வி–II)/2018, நாள் 26.04.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை–2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6.
ஆணையர், தொல்லியல் துறை, தமிழ் வளர்ச்சி வளாகம்,தமிழ்ச்சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

<u>நகல்</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
✓பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

8/5/18